இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 11-12-2023

# மோசடித்தனம்

**பா.ஜ.க. ஜனநாயகப் படுகொலையை பட்டவர்த்தனமாக நடத்தும் என்பதற்கு நேற்றைய உதாரணம் மஹூவா மொய்த்ரா! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை ஒரு கேலிக்கூத்து விசாரணைக் கமிஷன் மூலமாக வீழ்த்தி இருக்கிறது பா.ஜ.க. ஆட்சி. இது தான் ராகுல் காந்திக்கும் நடந்தது. மஹூவாவுக்கும் நடந்திருக்கிறது.**

ராகுல் காந்தி விவகாரத்தில் என்ன நடந்தது? ‘மோடி’ என்ற வார்த்தைக்கு தவறான அர்த்தம் சொன்னாராம். 16.04. 2019 அன்று ராகுல் காந்திக்கு எதிராக குஜராத் முன்னாள் அமைச்சரும் பா.ஜ.க. எம்.எல்.ஏ.-வுமான புர்னேஷ் மோடி என்பவர் சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். 24.06.2021 அன்று இந்த வழக்கு விசாரணையில் சூரத் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி ஆஜர் ஆனார். இதன் முக்கிய திருப்பு முனையாக 07.03.2022 அன்று வழக்கு தொடுத்த நபரே, வழக்கு விசாரணைக்கு தடை வாங்கினார். ஓராண்டு காலம் அதனைப் பற்றி எந்தப் பேச்சும் இல்லை.

07.02.2023 அன்று அதானியும் பிரதமர் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார். முன்பு வழக்கு போட்டவர் 16.2.2023 அன்று திடீரென்று குஜராத் உயர்நீதிமன்றம் சென்று, தான் பெற்ற தடை உத்தரவை திரும்பப் பெறுகிறார். இதையடுத்து, 17.03.2023 வாதங்களை தொடர சூரத் மாவட்ட நீதிபதி அனுமதிக்கிறார். ஐந்தே நாளில் அதாவது 23 ஆம் தேதியே தீர்ப்பு வருகிறது, ராகுலுக்கு 2 ஆண்டு சிறை விதிக்கப்படுகிறது. அதற்காகவே காத்திருந்தது போல, மறு நாளே - 24 ஆம் தேதி அன்று அவரது எம்.பி. பதவி பறிக்கப்படுகிறது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் வந்துவிட்டார் ராகுல்.

**ராகுல் பதவியைப் பறிக்க நடத்திய அவசர மோசடித் தனமே மஹூவா விவகாரத்திலும் நடந்துள்ளது. அதானியின் ரூ.13 ஆயிரம் கோடி முறைகேடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கேள்வி கேட்டவர் திரிணாமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான மஹூவா மொய்த்ரா. ஆவேசமாகவும் ஆக்ரோஷமாகவும் தனது வாதங்களை வைக்கக் கூடியவர் அவர். இதற்கு நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வால் பதில் அளிக்க முடியவில்லை. அவரது உரை சமூக வலைத்தளங்களில் அதிகமாக பரவியது. ஒவ்வொரு பிரச்சினையின் போதும் தனது டுவிட்டரில் பா.ஜ.க.வையும் ஒன்றிய அரசையும், பிரதமர் மோடியையும் வறுத்தெடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார் மஹூவா. எனவே இவரை முடக்க முடிவெடுத்தார்கள்.**

‘அதானிக்கு எதிராக கேள்வி எழுப்ப தொழில் அதிபர் ஹிரா நந்தானியிடம் இருந்து 2 கோடி ரூபாய் மஜூவா லஞ்சமாகப் பெற்றார்’ என்று குற்றம் சாட்டினார்கள். இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தியதாக ஜெய் ஆனந்த் தேஹத்ராய் என்பவரைக் குறிப்பிட்டார்கள். இந்த ஜெய் ஆனந்த் என்பவர் மஹூராவின் முன்னாள் காதலராம். எப்படி ஆள் பிடிக்கிறார்கள் பார்த்தீர்களா? கேவலமான இழிவழி அல்லவா இது? இருவரின் தனிப்பட்ட விவகாரத்தை தங்களது சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதனை நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லாவிடம் புகாராகத் தருகிறார் பா.ஜ.க. எம்.பி.யான நிஷிகாந்த் துபே. இதனை நாடாளுமன்ற நெறிமுறை குழு விசாரணை நடத்துகிறது. இந்தக் குழு என்ன செய்திருக்க வேண்டும்? இந்தக் குழு மஹூவாவை விசாரித்தது. விசாரணையின் பாதியில் மஹூவா வெளியேறினார். தன்னை அநாகரிகமான கேள்விகளால் அசிங்கப்படுத்தினார்கள் என்று சொல்லி விட்டு மஹூவா வெளியேறினார்.

**மஹூவாவுக்கு பணம் கொடுத்ததாகச் சொல்லப்படும் ஹிரா நந்தானியை நேரில் அழைத்து விசாரித்தார்களா? விசாரிக்க வில்லை. மஹூவா பணம் வாங்கியதாகக் குற்றம் சாட்டிய ஜெய் ஆனந்தை நேரில் அழைத்து விசாரித்தார்களா? விசாரிக்கவில்லை. மஹூவா பணம் வாங்கினார் என்பதற்கான ஆதாரம் காட்டப்பட்டதா? இல்லை. இதுதான் பா.ஜ.க.வின் நீதிபரிபாலன முறை. இதுதான் மோடி கோர்ட். மோசடித்தனத்தின் உச்சம் இதுதான்.**

**“விசாரணைக்கு வர நான் தயார். ஆனால் ஹிரா நந்தானி, ஜெய் ஆனந்த் ஆகிய இருவரையும் நான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும்” என்றார் மஹூவா. இது கடைசி வரை நடக்கவில்லை. பதவியைப் பறிக்கலாம் என்று குழு சொன்னதாம். பறித்துவிட்டார்கள். அவ்வளவுதான் விசாரணை நாடகம்.**

“குழுவின் தலைவர் வினோத் சோன்கர், என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய விரிவான கேள்வியை, தனிப்பட்ட கேள்விகளைக் கேட்டார். அந்தக் கேள்விகள் என் உடைகளைப் பறிப்பதற்குச் சற்றும் குறைவானவை அல்ல. அதேநேரத்தில் விசாரணையின் போது இரண்டு பா.ஜ.க. எம்.பி.கள் அங்குதான் இருந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்” என்று மஹூவா சொல்லி இருந்தார். ஒன்றிய அரசும் பா.ஜ.க. தலைமையும் வெட்கத்தால் தலை குனிய வேண்டாமா?

**“எனக்கு 49 வயது ஆகிறது. இன்னும் 30 ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பா.ஜ.க.வுடன் மோதுவேன். எந்தப் பின்புலமும் இல்லாமல் அரசியலுக்கு வந்த ஒரு பெண் எம்.பி.யை அடிபணிய வைக்க எவ்வளவு தொல்லைதான் தருவீர்கள்? பெண் சக்தி என்ன என்று காட்டுவேன்” என்று மஹூவா சொல்லி இருப்பது சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகக் குரலாக இருக்கிறது.**

பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்து விட்டதாக மார்தட்டிக் கொள்ளும் பா.ஜ.க., ஒரு எதிர்கட்சி எம்.பி.யை பதவி நீக்கம் செய்வதற்காக அவரது தனிப்பட்ட வாழ்க்கையைக் கேள்வி கேட்டு துரத்தி அடிக்குமானால் மக்களால் துரத்தி அடிக்கப்பட வேண்டாமா பா.ஜ.க.?

●●



தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (10.12.2023) மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்கள்

## புயலால் சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 1.20 கோடி பேர் பாதிப்பு!

### மிக்ஜாம் புயலை தேசிய பேரிடராக அறிவிக்க பிரதமரிடம் டி.ஆர்.பாலு எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, டிச. 11-

மிக்ஜாம் புயல் மழை பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து தமிழ்நாட்டிற்கு நிதி வழங்க வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்தி உள்ளதாக நாடாளுமன்ற தி.மு.க. கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட கன்னடபாளையம், அன்னை அஞ்சுகம் நகர், சமத்துவ பெரியார் நகர், காந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரிசி, பருப்பு, சர்க்கரை, பாய், போர்வை, காய்கறி உள்ளிட்ட பொருட்களை, நாடாளுமன்ற தி.மு.க. கழக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மாநகர மேயர் வசந்தகுமாரி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர். இந்த நிகழ்ச்சிக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, மிக்ஜாம் புயல் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என, தி.மு.க. சார்பில் பிரதமர் மோடியிடம் வலியுறுத்தப்பட்டதாக கூறினார். மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் ஒரு கோடியே 20 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டி.ஆர்.பாலு தெரிவித்தார். புயல் மழை பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்தால்தான் கூடுதல் நிதி கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

### 20 லாரிகளில் நிவாரணப் பொருட்கள்:

## வேளச்சேரி - மடிப்பாக்கம் - பள்ளிக்கரணையில் விநியோகம்!

### அமைச்சர் எ.வ.வேலு 5-வது நாளாக வழங்கினார்!

*சென்னை, டிச.11-*

*மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னையில் கனமழை பெய்து பாதிக்கப்பட்ட வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, 5-வது நாளாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் வழங்கினார்.*

*மிக்ஜாம் புயல் காரணமாக, வரலாறு காணாத அளவில், தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பாதிப்புக்குள்ளான வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணைப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 5வது நாளாக நேற்று முன்தினம் (9.12.2023) வழங்கினார்.*

*சென்னை, வேளச்சேரியில், கக்கன் நகர், சாஸ்திரி நகர், சசி நகர் ஏரிக்கரை, பவானி நகர், தமிழ்நாடு வீட்டுவசதி காலனி, அம்பேத்கர் நகர், மடிப்பாக்கத்தில், ஸ்ரீநகர், எல்.ஐ.சி.நகர், லட்சுமி நகர் வார்டு188, பாலாஜி நகர், பள்ளிக்கரனையில், வள்ளல் பாரி நகர், பாண்டியன் நகர், பசும்பொன் நகர், ஸ்ரீநகர் வார்டு 190, ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று, 1/2 லிட்டர் பால் பாக்கெட்8000, பிஸ்கெட் 16000, சுவீட் பன்5000, சேமியா, ரவா500, கோதுமை5500, அரிசி 5கிலோ பேக் 3000, அரிசி 4 கிலோ பேக்500, அரிசி 2 கிலோ பேக்7500, வாட்டர் பாட்டில்1000, கைலி 10000, போர்வை14000, டவல் 3800, சேலை1500, நைட்டி 3500, குழந்தைகள் துணி500, பாய்5000 மற்றும் மருந்து பொருட்கள் அடங்கிய தொகுப்பு9000 ஆகிய நிவாரணப் பொருட்கள், சுமார் 20 லாரிகளில் கொண்டு சென்று அவர் நேரில் வழங்கினார்.*

*இந்த நிகழ்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன் வேளச்சேரி மண்டலப் பொறுப்பாளர் திருமதி.வி.சுப்புலெட்சுமி, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் இரா. சந்திரசேகர், பாலமுருகன் மற்றும் முருகேசன், பொதுப் பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்தனர்.*

### துறைமுகம் தொகுதியில்

## கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 8,700 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டி!

*சென்னை, டிச.11-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் நேற்று முன்தினம் (09.12.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 8,700 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.*

*மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தமிழக அரசும், மாநகராட்சி நிர்வாகமும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மழைநீர் வெளியேற்றுதல், உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய் தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.*

*அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.12.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், 54 மற்றும் 59வது வார்டுகளை சேர்ந்த, டி.என்பி.எஸ்.சி சாலை, நாராயணப்பா சாலை, என்.சி.போஸ் சாலை, தேவராஜ் முதலியார் தெரு, மெமோரியல் ஹால் சாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 4,900 குடும்பங்களுக்கும், பிராட்வே, ஜாபர் ஜெராங் தெருவில் 60வது வார்டை சேர்ந்த 1,500 குடும்பங் களுக்கும், டான்பாஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் 56வது வார்டை சேர்ந்த 2,300 குடும்பங்களுக் கும் ஆக மொத்தம் 8,700 குடும்பங்களுக்கு அரிசி, பால், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் போன்ற நிவாரண உதவிகளை வழங்கினார்.*

*பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-*

*அ.தி.மு.க. ஆட்சியில் 2015 ஆம் ஆண்டு தொடங்கி 2021 ஆம் ஆண்டு வரை நகராட்சி நிர்வாகத் துறை மானிய கோரிக்கைகளில் 6500 கோடி ரூபாய் மழை நீர் கட்டமைப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது சட்டமன்ற குறிப்புகளில் இருக்கின்றது.*

*2021 ஆம் ஆண்டு இன்னைக்கு வெள்ளை அறிக்கை கேட்கின்ற கருப்பு உள்ளம் கொண்ட அந்த மனிதர், 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது நாங்கள் போதிய கட்டமைப்புகளை அமைத்து விட்டோம், சிங்கப்பூர் போன்று எவ்வளவு பெருமழை வந்தாலும் ஒரு சொட்டு தண்ணீர் கூட நிற்காது என்று கூறினார்.*

*அவர் ஆட்சி முடிவுற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின் போது இன்றைய மழையின் அளவில் 50 சதவீத மழையே பெய்த போது சென்னையே தத்தளித்து கொண்டிருந்ததை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். ரூ.4000 கோடிக்கு எங்கெல்லாம் பணிகள் நடைபெற்றிருக்கிறது என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, துறையின் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்து கூறி இருக்கின்றார்.*

*நாங்கள் திரும்ப கேட்கிறோம். நீங்கள் ரூ.6,000 கோடியை செலவு செய்வதற்கு வெள்ளை அறிக்கை விலாவாரியாக வெளியிட தயாரா என்பதுதான். குற்றம் பார்ப்பின் சுற்றம் இருக்காது என்பார்கள். இப்போது மக்களை பாதிப்பிலிருந்து மீட்பதற்கு அனைத்து கரங்களும் ஒன்றிணைந்து களத்தில் நிற்க வேண்டுமே தவிர, தொடர்ந்து அவதூறு பேசுவதை தவிர்த்து, மக்கள் பணியில் ஈடுபடுபவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், பணிகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்பு தருவது தான் எதிர்க்கட்சித் தலைவரின் முடிவாக இருக்க வேண்டும்.*

*கனமழையில் ஒரு சில தாழ்வான பகுதிகளில் தேங்கிய நீருக்கு தேவையான கட்டமைப்புகளை அமைக்க தற்போது திட்டமிட்டு இருக்கின்றோம். அடுத்து வருகின்ற மழைக்காலங்களில் அந்தப் பகுதியிலும் தண்ணீர் தேங்காத அளவிற்கும், இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*அதோடு மட்டுமல்லாமல் சமீபத்தில் பெய்த மழை 2015-ஆம் ஆண்டு பெய்த மழையை விட அதிகமானது. மழையால் ஏரிகள் மற்றும் கால்வாய்கள் அனைத்தும் நிரம்பிவந்ததை நீங்களே கண்டீர்கள். மழை விட்டாலும் கால்வாய்களிலிருந்து செல்லும் தண்ணீர் முகத்துவாரங்களில் பெரிய அளவு உள்வாங்கவில்லை.*

*அதனால் தான் இரண்டு நாட்கள் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருந்த நிலை இருந்தது. இப்போது 95 சதவீத பகுதிகளில் இயல்பு நிலை திரும்பியிருக்கின்றது. எந்தந்த மாவட்டங்களில் புயல் மழையால் பாதிப்பு இல்லையோ அந்த மாவட்டங்களிலிருந்து பணியாளர்களை அழைத்து வந்து தேங்கிய தண்ணீரை அகற்றுவதற்கு சூப்பர் சக்சன் மெஷின்களை கொண்டு வந்து துரிதப்பணியை மேற்கொண்டுள்ளோம். சென்னையில் மட்டும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளி மாவட்ட பணியாளர்கள் தூய்மை பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.*

*மாநகர் முழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குப்பைகளினால் நோய்த் தொற்று வந்து விடக்கூடாது என்பதற்காக குப்பைகளை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்றது.*

*எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு 34 சென்டிமீட்டருக்கு அதிகமாக, 47 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பெருமழை பெய்துள்ளது. இருப்பினும் இரண்டு நாட்களில் மாநகரம் இயல்பு நிலைக்கு திரும்பி இருக்கிறது என்றால் அது முதலமைச்சர் அவர்கள் கண் துஞ்சாமல் ஆற்றிய உழைப்பின் காரணமாகதான். இன்னும் ஓரிரு நாளில் மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் முழுமையாக இயல்புநிலை திரும்பும் என்று தெரிவித்தார்.*

*முன்னதாக, சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலத்துக்குட்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் சாலை, லட்சுமி மஹாலில் நேற்று முன்தினம் (09.12.2023) உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பால், பிஸ்கட்கள், பிரட், போர்வை, குடிநீர் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினர்.*

*இந்நிகழ்ச்சிகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் ஏ.எஸ் முருகன், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (10.12.2023) திரு.வி.க. நகர் மண்டலம், 75வது வார்டு, சென்னை, ஓட்டேரி செல்லப்பா தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினர். உடன் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாமன்ற உறுப்பினர் திருமதி.தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.